
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2023


## விடைத்தாள் புள்ளியிடலுக்கான அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்


## பத்திரம் II








முழுப் பதிப்புரிமையுடையது

செம்மையாக்கம் செய்யப்பட்ட பிரதி

Past Papers Wiki

# மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023

## பத்திரம் II

### விடைத்தாள் புள்ளியிடுவதற்காக பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்

**01. விடைத்தாள்களை புள்ளியிடலில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

1.1 சகல வினாக்களினதும் விடைகளுக்கெதிரே சரியாயின் "✓" என அடையாளமிட்டு அதற்குரிய புள்ளிகளையும் பிழையாயின் " ×" என அடையாளமிட்டு 00 எனவும் வலது பக்கக் கோட்டிற்கு வெளியே தெளிவாகக் குறிப்பிடவும்.

1.2 ஒவ்வொரு பக்கத்திற்குமுரிய சரியான விடைகளுக்குரிய புள்ளிகளின் மொத்தத் தொகையை வலது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்ட **கூட்டினுள் இரு இலக்கங்களினால் குறிப்பிடவும்.**

1.3 ஒவ்வொரு பக்கத்திலும் குறிப்பிட்டுள்ள மொத்தப் புள்ளிகளை முன்பக்கத்திலுள்ள குறித்த பக்க எண்ணுக்கு எதிரே உள்ள கூட்டினுள் தெளிவாக எழுதவும்.

1.4 முழு விடைத்தாளையும் கவனத்தில் கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும் சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் மேலதிகமாக 02 புள்ளிகள் வழங்குக. கையெழுத்து **தெளிவற்றிருப்பினும்** சரியாக எழுதப்பட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக. அப்புள்ளியை +02 அல்லது +01 அல்லது +00 என 8 ஆவது பக்கத்தில் எழுதப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளுக்கு எதிரில் இடவும். அவ்வாறே முதல் பக்கத்தில் 08 ஆவது பக்கத்திற்குரிய புள்ளிகளை குறிப்பிட்ட இடத்தில் +02 அல்லது +01 அல்லது +00 என மேலதிக புள்ளிகளை எழுதுக. (+02 அல்லது +01 என புள்ளி வழங்காது விடின் +00 எனக் குறிப்பிடுக.)

1.5 இறுதிப்புள்ளிகளை **இலக்கத்திலும் எழுத்திலும்** அதற்குரிய கூட்டினுள் தெளிவாக எழுதவும்.

**02. புள்ளி வழங்குவது தொடர்பான சுருக்க விபரம் :**

2.1 வினா இல 1 இலிருந்து வினா இல 8 வரையுள்ள மற்றும் 10 இலிருந்து 14 வரையுள்ள வினாக்களின் எல்லா பகுதிகளுக்கும் சரியான விடை எழுதியிருப்பின் 01 புள்ளி வீதம் வழங்குக.

2.2 வினா இல. 9 இன் சரியான விடைக்கு 02 புள்ளிகளை வழங்குக.

2.3 வினா இல. 15 இலிருந்து வினா இல 29 வரையான வினாக்களின் சரியான விடைக்கு 02 புள்ளி வீதம் வழங்குக.

2.4 வினா இல. 30 தொடக்கம் 59 வரை சரியான விடைக்கு 01 புள்ளி வீதம் வழங்குக.

2.5 வினா இல. 60 இன் ஒரு வாக்கியத்திற்கு 02 புள்ளிகள் வீதம் வழங்குக.

2.6 வினா இல 1 தொடக்கம் 8 வரையில் ( வினா இல 2,3 தவிர ) மற்றும் 60 ஆகிய வினாக்களுக்கான விடைகளில் எழுத்துப்பிழை இருத்தல் கூடாது.

2.7 வினா இல 10 இற்கான விடைகளில் எழுத்துப்பிழைகள் இருப்பின் புள்ளி வழங்க வேண்டாம். ஆங்கில பேரெழுத்துகள், சிற்றெழுத்துகள் மாறி மாறி எழுதியிருப்பினும் புள்ளிகள் வழங்குக. வினா இல 11 பிரதி செய்து விடை எழுதுவதால் எழுத்துப் பிழைகள் இன்றியும் வாக்கியங்கள் இரண்டினதும் முதல் எழுத்து ஆங்கில பேரெழுத்தாகவும் மிகுதி எழுத்துக்கள் ஆங்கில சிற்றெழுத்தாகவும் இருத்தல் வேண்டும்.

2.8 சரியான விடையின் கீழ்க் கோடிடுக என அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பினும் சரியான விடையினை ஏதாவதொரு முறையில் அடையாளப்படுத்தப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக.

## 03. புள்ளித்தாளைத் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை

3.1 புள்ளித்தாளில் "Total Marks" எனும் நிரலினை புள்ளிகளைப் பதியப் பயன்படுத்தவும்.

3.2 அந்நிரலில் ஒவ்வொரு பரீட்சார்த்தியினதும் சுட்டெண்ணுக்கு எதிரே அவ்விடைத்தாளுக்குரிய இறுதிப் புள்ளியை குறிப்பிடவும்.

3.3 இறுதிப் புள்ளியை எதிரே இரு நிரல்களை விட்டு **தெளிவான எழுத்தில்** எழுதுக.

3.4 புள்ளித் தாளை பூரணப்படுத்தும்போது எவையேனும் பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தெளிவாகத் **தனிக்கோடொன்றால் வெட்டிவிட்டு** எதிரே மீண்டும் எழுதி பதிந்த மற்றும் பரீட்சித்த பரீட்சகர்கள் இருவரும் சிற்றொப்பம் இட வேண்டும்.

3.5 புள்ளிகள் திருத்தி எழுதப்பட்ட இடங்களில் விடைத்தாள் பரீட்சகர் 1, 2 ஆகிய இருவரும் சிற்றொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

3.6 புள்ளிகள் வெட்டி திருத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புள்ளித்தாளும் விடைத்தாளும் பிரதம பரீட்சகரிடம் காட்டப்பட்டு, அவரின் ஒப்பம் திருத்தப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் பெறப்பட வேண்டும்.

3.7 அத்துடன் செய்யப்பட்ட திருத்தம் விபரப் புள்ளித்தாளின் மறுபக்கத்தின் அடியில் உள்ள "குறிப்புக்கள்" என்ற இடத்தில் எழுதப்பட்டு பரீட்சகர்கள் இருவரினதும் முழு ஒப்பம் இடப்பட வேண்டும்.

3.8 ஒவ்வொருபுள்ளித்தாளிலும்புள்ளிகளைப்பதிந்தவர்ஒப்பமிடுவதும் புள்ளித்தாளைவிடைத்தாள்களுடன் ஒப்பிட்டுப் பரீட்சித்தவரும் புள்ளிகளை உறுதிப்படுத்துத்தும் எண்கணிதப் பரீட்சகரும் ( EMF ) பிரதம பரீட்சகரும் அவரவருக்குரிய இடத்தில் ஒப்பமிட்டு, குறியீடெண்ணையும் இட வேண்டியது கட்டாயமானதாகும்.

| |
|---|
| விடைத்தாளுக்குப் புள்ளியிடும்போதும் விபரப் புள்ளித்தாளைப் பூரணப்படுத்தும் போதும் தூய்மை, தெளிவு, நேர்மை, நடுநிலைமை என்பன பேணப்படுவது அவசியமாகும். |

| |
|---|
| விடைத்தாளில் அல்லது புள்ளிப்படிவத்தில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட வேண்டுமாயின், அது முதலாம் பரீட்சகர் மூலமாகவே செய்யப்பட வேண்டும். ஆயினும் அவையெல்லாம் பிரதம பரீட்சகரின் அனுமதியுடன் செய்யப்பட்டுள்ளன எனக் காட்டுவதற்கு பிரதம பரீட்சகரின் கையொப்பமும் அத்துடன் எண்கணித பரீட்சகர், இரண்டாம் பரீட்சகர் ஆகியோரின் சிற்றொப்பங்களும் இடப்படல் வேண்டும். |

Past Papers Wiki

# பத்திரம் II
## புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | (i) திங்கட்கிழமை | 01 |
| | (ii) நாளாந்த நடத்தைகள்<br>(மேற்கோட்குறி இடப்பட்டாலும் புள்ளி வழங்குக.) | 01 |
| | (iii) வீட்டுத்தோட்ட வேலைகளில் உதவி செய்தல் / உதவுதல் / வீட்டுத்தோட்ட வேலைகளில் உதவி செய்வதை மறந்து விடாமல் செய்வதாக | 01 |
| | (iv) (கமலினியின் / தனது / தன் / அவளுடைய) வீட்டுத்தோட்டத்தைப் பார்வையிட வருமாறு (அழைப்பு விடுத்தாள்.) | 01 |
| | (v) நேர அட்டவணைப்படி வேலை செய்வதன் முக்கியத்துவம் / நேர அட்டவணைக்கேற்ப வேலை செய்வதன் முக்கியத்துவம் | 01 |
| | (vi) (கமலினி / அவள்) நாள்தோறும் பாடசாலைக்கு வருகின்றவர் (எனவும்) பாடசாலை நடவடிக்கைகளில் பின்நிற்காத (மாணவி) / பின்நிற்காதவர் (எனவும்) | 01 |
| 2 | (i) ✓<br>(ii) ✓<br>(iii) ×<br>(iv) ✓<br>(v) × | 01<br>01<br>01<br>01<br>01 |
| 3 | (1) பார்க்கின்றது | 01 |
| 4 | (i) (1) கண்காட்சி<br>(ii) (3) குழந்தை<br>(iii) (2) எழுத்தாளர் | 01<br>01<br>01 |
| 5 | நாங்கள்/ நாம் பாடசாலை வேலைகளில் ஈடுபட்டோம். | 01 |
| 6 | (i) காடு/ வனம்/ அடவி/ ஆரணியம்<br>(ii) பனுவல்/ நூல்/ ஏடு | 01<br>01 |
| 7 | (i) நண்பன்<br>(ii) அறியலாம்<br>(இடம்மாறி எழுதியிருந்தாலும் புள்ளி வழங்குக.) | 01<br>01 |
| 8 | (i) பேராசை பெரு நட்டம்<br>(ii) ஆழமறியாது காலை விடாதே | 01<br>01 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 9 | "தூய்மையான சூழல்" என்ற தலைப்பினை விளக்கும் சுவரொட்டிப் போட்டி இடம் பெறுகிறது.<br>(ஒற்றை மேற்கோட்குறி இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். இரண்டு நிறுத்தக் குறிகளும் சரியாக இடப்பட்டிருப்பினும் மட்டும் புள்ளி வழங்குக.) | 02 |
| 10 | (i) P e a c o c k (ii) P u m p k i n<br>சிற்றெழுத்துகள், பேரெழுத்துகள் மாறிமாறி எழுதியிருப்பினும் புள்ளி வழங்குக. | 01<br>01 |
| 11 | (i) My sister has ten rupees.<br>(ii) We want to buy a bat.<br>(பிரதி செய்து எழுதுவதால் எழுத்துப் பிழையின்றி எழுதப்பட வேண்டும்.) | 01<br>01 |
| 12 | (i) பெற்றோர்/ பெற்றார்/ பெற்றோர்கள்/ பெற்றார்கள்<br>(ii) நெருப்பு/ தீ/ அக்கினி/ தழல்/ நெருப்பு வைத்தல் | 01<br>01 |
| 13 | கால் | 01 |
| 14 | எலியட்ட யன்னத?/<br>எலியட்ட யன்டத? | 01 |
| 15 | 3640 / 3 640 | 02 |
| 16 | 5 479 / 5479<br>9 475 / 9475<br>(ஒரு எண் மட்டும் சரியாக எழுதப்பட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக.) | 02 |
| 17 | 7, 11<br>(ஒரு எண் மட்டும் சரியாக எழுதப்பட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக.) | 02 |
| 18 | இருபதாயிரத்து அறுநூற்றைம்பது<br>இருபதாயிரத்து அறுநூற்று ஐம்பது | 02 |
| 19 | 59 / ஐம்பத்தொன்பது<br>(சரியான விடையுடன் பயணிகள் என எழுதியிருந்தாலும் புள்ளி வழங்குக.) | 02 |
| 20 | 8 / எட்டு / எட்டு மாம்பழங்கள் | 02 |
| 21 | சதுரமுகி | 02 |
| 22 | 17 25 (சொற்களிலும் எழுதலாம்) | 02 |
| 23 | பிற்பகல் 1.30 / 13:30 / பி.ப 1.30 / பி.ப ஒரு மணி முப்பது நிமிடம் (நிமிடங்கள்) / பி.ப. 1 மணி 30 நிமிடம் (நிமிடங்கள்) | 02 |
| 24 | 47 / 47 ஆகும். / நாற்பத்தேழு<br>(சரியான விடையுடன் மாணவர்கள் என எழுதியிருந்தாலும் புள்ளி வழங்குக.) | 02 |
| 25 | 12 250 | 02 |
| 26 | 5 / 5 ஆகும். / ஐந்து | 02 |
| 27 | 255 / 255.00<br>2<br>(ஒரு விடை மட்டும் சரியாயின் ஒரு புள்ளி வழங்குக.) | 02 |
| 28 | 4 / நான்கு / 4 தடவைகள் / 4 ஆகும் | 02 |
| 29 | (i) 5 / 5 ஆகும். / ஐந்து<br>(ii) 23 / 23 ஆகும். / இருபத்து மூன்று | 01<br>01 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 30 | (3) அரிசி வகை | 01 |
| 31 | (2) அழுகத்தக்க குப்பைகளை மண்ணுடன் சேர்த்து விடுதல் | 01 |
| 32 | (1) கொய்யாப்பழம் | 01 |
| 33 | (2) அந்த இடத்தில் மண் அரித்துச் செல்லப்பட்டு இருந்தமை | 01 |
| 34 | (3) நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக | 01 |
| 35 | (2) உடலின் நிறை குறைதல் | 01 |
| 36 | (3) நெருப்புக் காய்ச்சல் | 01 |
| 37 | (1) வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டமையால் | 01 |
| 38 | (3) கறுப்பநிற, கபிலநிறச் சிறகுகளும் சிவப்பு நிறக் கண்களும் உள்ளன | 01 |
| 39 | (2) தள்ளுவண்டி | 01 |
| 40 | (1) விரைவாக நலம் பெறுவதற்காக அதிக அளவு மாத்திரைகளை உட்கொள்ளுதல் | 01 |
| 41 | (1) உதவி கோரிச் சத்தமிடல் | 01 |
| 42 | (3) மூன்று பாத்திரங்களிலும் சம அளவு நீர் உள்ளது. | 01 |
| 43 | (2) எண்ணையைப் பிழிந்து எடுப்பதற்கு | 01 |
| 44 | (1) விலங்குகளின் எண்ணிக்கை மிக விரைவில் அதிகரித்துப் பின்னர் குறைவடையும். | 01 |
| 45 | (2) மின்னழுத்தியைப் பயன்படுத்தும்போது பல நாட்களுக்குத் தேவையான ஆடைகளை ஒரு தடவையில் அழுத்துதல் | 01 |
| 46 | (3) வீதிக்குக் குறுக்கே செல்லும் போது இரண்டு பக்கங்களையும் பார்ப்பதற்கான தேவை இல்லாதிருத்தல் | 01 |
| 47 | (1) விலங்குகளின் மூலம் | 01 |
| 48 | (3) நீர் இல்லாதிருந்தமை | 01 |
| 49 | (2) மாதிரிப் புவிக் கோளத்தை அதன் அச்சினைச் சுற்றிச் சுழலச் செய்தல் | 01 |
| 50 | (1) தேனீ | 01 |
| 51 | (2) உப்புக் கலந்த குளிர் நீர் | 01 |
| 52 | (3) தான் விரும்பும் விடயங்களை விரும்பாதவர்களும் இருக்கக்கூடும் என்பதை | 01 |

| வினா இல. | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| 53 | (1) தாவரங்களில் பச்சை நிற இலைகளிடையே பச்சை நிறப் புழுக்கள் இருத்தல். | 01 |
| 54 | (2) தன்னிறைவும் செழிப்பும் | 01 |
| 55 | (3) உடல் ஆரோக்கியமாவதற்குக் காரணமாகும். | 01 |
| 56 | (1) பொருட்களை உரிய விதத்தில் பராமரித்தல் வேண்டும். | 01 |
| 57 | (1) விலங்குகளுக்கு அவற்றின் சூழலிலேயே வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல் | 01 |
| 58 | (2)   | 01 |
| 59 | (3) மின்குமிழைக் கழற்றுவதற்கு ஈரமான துணித் துண்டைப் பயன்படுத்துதல் | 01 |
| 60 | **03 சரியான வாக்கியங்கள்**<br><br>**வாக்கியங்களை மதிப்பிடுவதற்கான அறிவுறுத்தல்கள்**<br>i. சரியான 3 வாக்கியங்களுக்கு 02 புள்ளிகள் வீதம் (02 × 3) 06 புள்ளிகள் வழங்குக.<br>ii. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து ( 5 ) சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.<br>iii. எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியானதாக இருத்தல் வேண்டும்.<br>iv. எழுத்துப் பிழைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.<br>v. சம்பவத்திற்குப் பொருத்தமானதாக எழுதப்பட்ட வாக்கியங்களாக அமைதல் வேண்டும்.<br>vi. எழுத்து வழக்கில் அமைந்த வாக்கியங்களாக இருத்தல் வேண்டும்.<br>vii. வாக்கியத்தின் கருத்து தெளிவாக வெளிப்படல் வேண்டும்.<br>viii. ஒரே கருத்துடைய வாக்கியத்தை மீண்டும் மீண்டும் எழுதியிருப்பின் **புள்ளி வழங்க வேண்டாம்.**<br>ix. வாக்கியங்கள் இறந்தகாலத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.<br><br>▪ **வாக்கியத்திற்கு ஒரு புள்ளி வழங்குவதற்கான அறிவுறுத்தல்**<br>வாக்கியமொன்றில் ஓர் எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் 01 புள்ளி மட்டும் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகளிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம். | 02 x 3 = 06 |

## மாணவர்கள் எழுதிய வாக்கியங்கள்

1. நான் ஓடிச் சென்று கடதாசிகள் சிலவற்றை எடுத்து வந்தேன். ✓ 02
2. நாங்கள் இருவரும் செய்த கப்பல்களை நீரில்விட்டு மகிழ்ந்தோம். ✓ 02
3. அதனைக் கேட்ட எனது உள்ளம் மகிழ்ச்சியும் ஆராவாரமாகவும் இருந்தது. ✗ 00
4. நாம் இருவரும் கப்பல்களை செய்து நீரில்விட்டு மகிழ்வோம். ✗ 00
5. கப்பல் வேகமாக ஓடுவதைப் பார்த்து நாங்கள் இருவரும் மகிழ்ச்சி அடைந்தோம். ✓ 02
6. நாங்கள் இருவரும் கடதாசியை எடுத்து அதில் கப்பல்களை செய்தோம். ✓ 02
7. நானும் மாதவனுடன் சேர்ந்து பலகடதாசிக் கப்பல்களைச் செய்தேன். ✗ 00
8. காற்று வேகமாக வீசியதால் அவை அழகாக மிதந்தது. ✗ 00
9. பெரு மழை பெய்ததால் சில கடதாசிக் கப்பல்கள் அழிந்து விட்டன. ✓ 02
10. அந்தக் கடதாசிக் கப்பல் நீரில் மூழ்காமல் நீந்திக் கொண்டிருப்பதை பார்த்தேன். ✓ 02
11. நான் எனது நண்பன் மாதவனுடன் சேர்ந்து அந்தக் கப்பலை மகிழ்ச்சியுடன் தண்ணிரில் விட்டு விளையாடுவோம். ✗ 00
12. பின்னர் நாங்கள் இருவரும் சேர்ந்து அந்தக் கப்பலை மகிழ்ச்சியுடன் தண்ணீரில் விட்டு விளையாடுவோம். ✗ 00
13. கப்பல் செய்தவுடன் மகிழ்ச்சியுடன் கப்பலை மழை நீருக்குள் விடுவேன். ✗ 00
14. நான் விட்ட கப்பல் சிறிது தூரம் சென்று மூழ்கிவிட்டது. ✓ 02
15. முதலில் பெரியவர்களிடம் கேட்டபின் கப்பலை மிதக்க விடுவோம். ✗ 00
16. நாங்கள் இருவரும் கடதாசியை எடுத்து அதில் கப்பல்களை செய்தோம். ✓ 02
17. பின்னர் நாங்கள் செய்த கப்பல்களை மழைநீரில் மிதக்கவிட்டு மகிழ்வேம். 00
18. மாதவனிடம் கப்பல் செய்யத் தேவையான கடதாசியை எடுப்போமென்று கூறினேன். ✓ 02
19. நான் அவன் கூறியதை ஆமோதித்து சில கடதாசிகளை எடுத்துக் கொண்டு வந்தேன். ✓ 02
20. நான் பல கடதாசிக் கப்பல்களை செய்து நீரில் மிதக்க விட்டேன். ✓ 02
21. ஆதவனும், மாதவனும் வீட்டிற்கு உள்ளே சென்று ஓர் ஒற்றை எடுத்து வந்தோம். ✗ 00
22. இருவரும் சேர்ந்து ஒரு கடதாசிக் கப்பலை செய்து முடிப்போம். ✗ 00

23. கடதாசிக் கப்பல் நீரில் மிதந்து செல்வதனை இரசிப்போம்.

24. பெருமழை விட்ட உடன் கப்பல்கள் எல்லாம் உடைந்திருப்பதைக் கண்டோம்.

25. ஆதவனும், மாதவனும் நன்றாகக் கப்பல்களை செய்து விடுவார்கள்.

26. அவனைப் பார்த்து கடதாசிக்கு நாம் என்ன செய்வது எனக் கேட்டேன்.

27. நாங்கள் இருவரும் கடதாசிகளை பழைய கொப்பியில் இருந்து கிழித்தோம்.

28. எனது நண்பனுக்கு நான் கடதாசிக் கப்பலை செய்து கொடுப்பேன்.

29. நான் எனது நண்பன் மாதவனுடன் சேர்ந்து பல வண்ணக் கடதாசிக் கப்பலைச் செய்தேன்.

30. கடதாசியில் செய்த கப்பல்களை நீரில் விட்டு மகிழ்வோம்.

31. நாம் எந்த சந்தர்ப்பத்திலும் கடதாசிகளை விரயமாக்கக் கூடாது.

32. நாம் எழுதுவதற்கும், படிப்பதற்கும் கடதாசிகள் உதவுகின்றன.

33. கடதாசிகள் எம் இரு கண்களையும் ஒத்தாகும்.

34. நான் பல கடதாசிக் கப்பல்களை செய்து காட்டினோன்.

35. பின் அந்தக் கடதாசிக் கப்பல்களை குப்பையில் போடுவோன்.

36. தண்ணீருக்குள் கப்பலை விட்டதும் கப்பல் மூழ்கியது.

37. எல்லா கடதாசிக் கப்பல்களும் ஊறிவிட்டது.

38. நானும் எனது தம்பியும் கப்பலைச் செய்து நீரினுள் மிதக்க விட்டோம்.

39. எனது கொப்பியில் தாளை கழற்று எடுப்பேன்.

40. பின்னர் மீண்டும் நாங்கள் இருவரும் அப்பா சொன்ன முறையின் படி கடதாசிக் கப்பல்களை செய்து வீட்டு முற்றத்தில் விட்டு மகிழ்ந்தோம்.

- ~~~~~~ -


விடைத்தாள் புள்ளியிடும் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சை - 2023

## விடைத்தாள் புள்ளியிடலுக்கான அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்

## பத்திரம் I



முழுப் பதிப்புரிமையுடையது

செம்மையாக்கம் செய்யப்பட்ட பிரதி

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

# மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023

## பத்திரம் I

## விடைத்தாள் புள்ளியிடுவதற்காக அறிவுறுத்தல்களும் புள்ளி வழங்கும் திட்டமும்

### 01. விடைத்தாள் மதிப்பிடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

1.1 எல்லா வினாக்களினதும் சரியான விடைகளுக்கு "✓" அடையாளத்தையும் பிழையான விடைகளுக்கு "×" அடையாளத்தையும் உரிய விடைகளுக்கு எதிரே கோட்டுக்கு வெளியே வலப் பக்கமாகத் தெளிவாகக் குறிப்பிடுக.

1.2 ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள சரியான விடைகளின் கூட்டுத்தொகையை அப்பக்கத்தில் அதற்கென அமைக்கப்பட்டுள்ள **கூட்டுக்குள் இரண்டு இலக்கங்களில் எழுதவும்.**

1.3 ஒவ்வொரு பக்கத்திலும் குறிக்கப்பட்ட சரியான ("✓") விடைகளின் எண்ணிக்கையை விடைத்தாளின் முன்பக்கத்தில் "பெற்ற புள்ளிகள்" எனும் இடத்தினுள் ஒவ்வொரு பக்கங்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்களில் சரியாக எழுதுக. அதன் பின்பு சரியான விடைகளின் கூட்டுத்தொகையை இறுதிப் புள்ளிகளுக்குரிய கூடுகளில் இலக்கத்திலும் எழுத்திலும் எழுதுக.

1.4 **ஏதேனும் வினாவொன்றிற்கு விடையளிக்கப்படாதவிடத்து மூன்று விடைகளின் கீழும் சிவப்பு நிறத்தில் கோடிட்டு " × " பிழை அடையாளமிடுக.**

1.5 விடைத்தாள் மதிப்பீட்டில் பரீட்சகர்கள் இருவரும் மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்துபவரும் பரீட்சித்த பின்பு தமது குறியீட்டெண்ணையும் கையொப்பத்தையும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

### 02. விபரப் புள்ளித்தாளைத் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை.

2.1 புள்ளித்தாளில் "Total marks" எனும் நிரலில் புள்ளிகளைப் பதியவும்.

2.2 அந்நிரலில் ஒவ்வொரு பரீட்சார்த்தியினதும் சுட்டெண்ணுக்கு எதிரே அவ்விடைத்தாளுக்குரிய இறுதிப் புள்ளியை இலக்கத்தில் பதியவும்.

2.3 அவ்விறுதிப் புள்ளியை அதற்கு முன்னால் உள்ள "Marks in words" எனும் நிரலில் தெளிவாக எழுத்தில் எழுதவும்.

2.4 விபரப் புள்ளித்தாளைப் பூரணப்படுத்தும் போது எவையேனும் பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தெளிவாகத் **தனிக்கோடொன்றால் வெட்டிவிட்டு,** மீண்டும் சரியாக எழுதி, புள்ளி பதிந்தவரும், பரீட்சித்தவரும் தங்களது சிற்றொப்பங்களை இடவும்.

2.5 புள்ளிகள் திருத்தி எழுதப்பட்ட இடங்களில் விடைத்தாள் பரீட்சகர் 1, 2 ஆகிய இருவரும் சிற்றொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

2.6 புள்ளிகள் வெட்டி திருத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புள்ளித்தாளும் விடைத்தாளும் பிரதம பரீட்சகரிடம் காட்டப்பட்டு, அவரின் ஒப்பம் திருத்தப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் பெறப்பட வேண்டும்.




2.7 அத்துடன் செய்யப்பட்ட திருத்தம் விபரப் புள்ளித்தாளின் மறுபக்கத்தின் அடியில் உள்ள "குறிப்புகள்" என்ற இடத்தில் எழுதப்பட்டு பரீட்சகர் இருவரதும் முழு ஒப்பம் இடப்பட வேண்டும்.

2.8 ஒவ்வொரு புள்ளித்தாளிலும் புள்ளிகளைப் பதிந்தவர் ஒப்பமிடுவதுடன் அவ்விபரப் புள்ளித்தாளை விடைத்தாள்களுடன் ஒப்பிட்டுப் பரீட்சித்தவரும் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணிதப் பரீட்சகரும் (EMF) பிரதம பரீட்சகரும் அவரவருக்குரிய இடத்தில் ஒப்பமிட்டு, குறியீட்டெண்ணையும் இட வேண்டியது கட்டாயமாகும்.

**விசேட அறிவுறுத்தல் :**

வினாக்களுக்குரிய சரியான விடையையோ அல்லது அதன் இலக்கத்தையோ விடையின் பகுதியையோ தெரிவு செய்து அதன் கீழ் கோடிட்டு அல்லது வட்டமிட்டு அடையாளமிட்டு சரியாக குறிப்பிடப்பட்டிருப்பின் அதனை சரியான விடையாகக் கொள்க. **விடை எழுத்தில் எழுதப்பட்டிருப்பின் சரியெனக் கொள்ள வேண்டாம்.**



## பத்திரம் I

| வினா இல. | விடை இல. | விடை |
|---|---|---|
| 01. | (2) | குதிரைக்கு அண்மையில் இருக்கும் பிள்ளை தொப்பியை அணிந்துள்ளது. |
| 02. | (3) |  |
| 03. | (2) | A மற்றும் D |
| 04. | (3) | காற்றினிலே தேனை வண்ணத்துப்பூச்சி |
| 05. | (2) |  |
| 06. | (1) | தந்தையின் சகோதரியின் மகன் ஆவார். |
| 07. | (2) | 4 |
| 08. | (1) | 5 |
| 09. | (3) | 31 ஆந் திகதியாகும். |
| 10. | (3) | 2007, 2008 ஆகிய இரு ஆண்டுகளில் ஒன்றாகும். |
| 11. | (2) | 2 |
| 12. | (3) | 2, 1 ஆகும். |
| 13. | (1) | தென்கிழக்கு, கிழக்கு |
| 14. | (2) |  |
| 15. | (1) |  |
| 16 | (3) |  |
| 17 | (2) | 2 வெள்ளைப் பந்துகள் |
| 18 | (2) | A, B, D |


සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



| வினா இல. | விடை இல. | விடை |
|---|---|---|
| 19 | (1) | 2 |
| 20 | (2) | வெள்ளை, மஞ்சள், நீலம் |
| 21 | (3) |  |
| 22 | (1) | 6 |
| 23 | (3) |  |
| 24 | (1) | மஞ்சள் நிறமும் ஊதா நிறமும் |
| 25 | (3) | ஒருவர் மாத்திரம் ஆண் பிள்ளை ஆவார். |
| 26 | (All) | எந்தவொரு விடையினை தெரிவு செய்திருந்தாலும் அல்லது விடையினை தெரிவு செய்யாவிட்டாலும் புள்ளி வழங்குக. |
| 27 | (1) | மு.ப. 9.15 |
| 28 | (1) | a, d, b, e, c |
| 29 | (2) | B D C A |
| 30 | (2) | 9 |
| 31 | (3) | 19 |
| 32 | (1) | 30 |
| 33 | (3) | சிங்கராஜாக் காட்டின் ஒரு பகுதி சபரகமுவ மாகாணத்திற்கும் ஒரு பகுதி தென் மாகாணத்திற்கும் உரியனவாகும். |
| 34 | (2) | ஒரு நாயாக இருக்கவோ, இல்லாதிருக்கவோ கூடும். |
| 35 | (3) |  |
| 36 | (1) | A, D |
| 37 | (1) | B |
| 38 | (2) |  |
| 39 | (2) | A, C |
| 40 | (3) | குறைந்தபட்சம் இரு கடிகாரங்களேனும் பிழையான நேரத்தைக் காட்டுகின்றன. |